அயலகத் தமிழர் நலவாரியம்

# அயலகத் தமிழர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் *(FAQs)*

***1. நான் காப்பீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாமா?***

- *நீங்கள் காப்பீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க செல்லுபடியாகும் அயலகத் தமிழர் அடையாள அட்டை, PAN அட்டை மற்றும் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று தேவை:*
  - *ஆதார் அட்டை*
  - *இந்திய ஓட்டுநர் உரிமம்*
  - *இந்திய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)*
  - *இந்திய வாக்காளர் அடையாள அட்டை*

- *தீவிர நோய்களுக்கான காப்பீட்டுத் திட்டத்திற்கு நீங்கள், பட்டியலில் குறிப்பிட்டுள்ள 13 நோய்களில் எதற்கும் சிகிச்சை பெறவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நோய்களுக்கான பட்டியலுக்கு கேள்வி எண் 5 பார்க்கவும்.*

***2. நான் என்ன காப்பீட்டுத் திட்டத்தினை தேர்வு செய்யலாம்?***

*காப்பீட்டுத் திட்டத்தில் பின்வரும் தேர்வுகள் உள்ளன:*

- *தனிநபர் விபத்துக் காப்பீடு (கட்டாயமானது)*
- *தீவிர நோய் காப்பீடு (ஆட்-ஆன்)*

***3. எனக்கு என்ன கவரேஜ் விருப்பங்கள் உள்ளன மற்றும் அந்தந்த காப்பீடு விருப்பங்களுக்கான சந்தா கட்டணங்கள் என்ன?***

*வெவ்வேறு காப்பீடு விருப்பங்களுக்கான சந்தா விகிதங்கள் கீழே உள்ளன:*

| ***தனிநபர் விபத்துக் காப்பீடு (கட்டாயம்)*** | |
|---|---|
| ***காப்பீட்டுத் தொகை (INR இல்)*** | ***பிரீமியம் (ஜிஎஸ்டி தவிர, INR இல்) - ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் செலுத்த வேண்டும்*** |
| *5,00,000* | *395 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |
| *10,00,000* | *700 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |
| ***தீவிர நோய் பாதுகாப்பு (விருப்பத்தின் பெயரில்)*** | |
| ***காப்பீட்டுத் தொகை (INR இல்)*** | ***பிரீமியம் (ஜிஎஸ்டி தவிர, INR இல்) - ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டும்*** |
| *1,00,000* | *350 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |
| *2,00,000* | *700 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |
| *3,00,000* | *1,050 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |
| *4,00,000* | *1,400 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |
| *5,00,000* | *1,750 + வங்கி பரிவர்த்தனை செலவுகள்* |

***4. காப்பீட்டுத் திட்டத்தின் செல்லுபடியாகும் கால அளவு என்ன?***

*தனிநபர் விபத்து காப்பீடு 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் மற்றும் தீவிர நோய் காப்பீடு 1 வருடத்திற்கு செல்லுபடியாகும் அதன் பிறகு காப்பீட்டுக் காலத்தினை நீட்டிக்க, காப்பீடு புதுப்பிக்கப்பட வேண்டும்.*

***5. தீவிர நோய்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வரும் நோய்கள் என்ன?***

*கீழே உள்ள நோய்களுக்கு தீவிர நோய்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்*

| ***Sl.*** | **தீவிர நோய் வகை** |
|---|---|
| *1.* | *Cancer* |
| *2.* | *First heart attack - of specified severity* |
| *3.* | *Open chest CABG* |
| *4.* | *Open heart replacement or repair of heart valves* |
| *5.* | *Coma of specified severity* |
| *6.* | *Kidney failure requiring regular dialysis* |
| *7.* | *Stroke resulting in permanent symptoms* |
| *8.* | *Major organ /bone marrow transplant* |
| *9.* | *Permanent paralysis of limbs* |
| *10.* | *Multiple sclerosis with persisting symptoms* |
| *11.* | *Primary pulmonary arterial hypertension* |
| *12.* | *Aorta graft surgery* |
| *13.* | *Total blindness* |

***6. ஏற்கனவே இருக்கும் நோய்கள் என்றால் என்ன? ஏற்கனவே இருக்கும் நோய்களுக்கு இந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாமா?***

*காப்பீடு தொடங்குவதற்கு முன் காப்பீடு செய்தவருக்கு இருக்கும் அறிகுறிகள் அல்லது அல்லது கண்டறியப்பட்ட மற்றும்/அல்லது மருத்துவ ஆலோசனை/சிகிச்சையைப் பெற்ற எந்தவொரு நோய் மற்றும் அதன் தொடர்புடைய நிலைகள். ஏற்கனவே இருக்கும் நோய்கள் இந்த காப்பீட்டுத் திட்டத்திலிருந்து நிரந்தரமாக விலக்கப்படுகின்றன.*

***7. தீவிர நோய்களுக்கான காப்பீட்டுக்கான காத்திருப்பு காலம் என்ன?***

*காப்பீடு வெளியிடப்பட்ட நாளிலிருந்து முதல் 30 நாட்களுக்கு, தீவிர நோய்க்கான உரிமைகோர நீங்கள் தகுதி பெற மாட்டீர்கள் என்பதை நினைவில் கொள்ளவும்*

***8. எந்தெந்த மருத்துவமனைகள் இதன் கீழ் வருகின்றன?***

*இந்த திட்டத்திற்கான மருத்துவமனைகளின் பட்டியல் எதுவும் இல்லை. நோயறிதலுக்குப் பின் ஏற்படும் சிகிச்சைச் செலவுகளை இந்த நலநிதி ஈடுசெய்கிறது. தனிப்பட்ட விபத்து ஏற்பட்டால், உங்கள் கோரிக்கைக்கு தேவையான அறிக்கைகளை சமர்ப்பிக்கவும். ஒப்புதல் கிடைத்ததும், நிதி உங்களுக்கு மாற்றப்படும்.*

***9. நான் ஒருமுறை தீவிர நோய் காப்பீட்டின் கீழ் பயன் பெற்றலால், மீண்டும் காப்பீட்டினை புதுப்பிக்க முடியுமா?***

*காப்பீடு செய்தவரின் வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே தீவிர நோய்களுக்கான உரிமைகோரலை அனுமதிக்க முடியும். காப்பீட்டின் கீழ் முதன்முறை தீவிர நோய்களுக்கான பலனை பெற்றவுடன் இக்காப்பீட்டுத் திட்டம் முடிவடைகிறது, மேலும் உங்களால் காப்பீட்டினை புதுப்பிக்க முடியாது.*

***10. எனக்கு ஒரு குடும்பம் உள்ளது. தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தில் மரணம் அடங்குமா?***

*ஆம். நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் பரிந்துரைப்பவரின் பெயரைக் குறிப்பிடுவது மட்டுமே. விபத்து காரணமாக மரணம் ஏற்பட்டால், காப்பீட்டுத் தொகை நீங்கள் பரிந்துரைப்பவருக்கு (நாமினி) காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும்.*

***11. தனிப்பட்ட விபத்துக் காப்பீடு இயற்கை மரணம் மற்றும் தினசரி நோய்களையும் உள்ளடக்குமா?***

*இந்த காப்பீடு விபத்து மரணம் மற்றும் விபத்தினால் ஏற்படும் குறைபாடுகள் மட்டுமே உள்ளடக்கும்.*

***12. நான் எத்தனை நபர்களை நாமினிகளாக நியமிக்க முடியும்?***

*இரண்டு நபர்கள் வரை நாமினிகளாக சேர்க்கப்படலாம் மற்றும் அவர்களுக்கான உரிமை சதவீதம் ஒதுக்கப்படலாம்*

***13. நான் காப்பீட்டுத் திட்டத்தில் எப்படி உரிமை கோருவது?***

*உங்கள் முகப்பு பக்கம் மூலமாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ நீங்கள் உரிமை கோர வேண்டும்.*

***14. எனது விசா உரிமை கோருவதற்கு தகுதியானதா?***

*காப்பீட்டுத் தொகைக்கு உரிமை கோரும் போது உங்களிடம் சரியான மாணவர் விசா/வேலைவாய்ப்பு விசா இருக்க வேண்டும்.*

*******